



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின் இஸ்லாமிய விவகார துறை (http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் ஆகிர் பிறை 16 ஹிஜ்ரி 1437<br>Friday of Jumada Al Thaany 16th Hijri 1437<br>25th March 2016 |

| | |
|---|---|
| தலைப்பு: | **சிக்கனமான வாழ்வை பெறும் வழிமுறைகள்!** |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |

*எழுத்து மற்றும் ஒலி-ஒளி வடிவில் வியாழன் காலை 7:30 (UTC - 3:30) மணிக்குள் இந்த தமிழாக்கம் அனுப்பபடுகிறது. இதனை நேரடியாகவும் உடனடியாகவும் பெற மேலே உள்ள எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அல்லது ஈமெயில் அனுப்பவும்.*

| தலைப்பு: | சீதேவித்தனமான வாழ்வை பெறும் வழிமுறைகள்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். கட்டுப்பட்டு நடப்பவர்களின் மனங்களை செம்மைப் படுத்துகிறான். வணக்க வழிபாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு நிம்மதியான வாழ்வை தருகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(33:70-71)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلاً سَدِيدًا* يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

“(ஆகவே,) நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்களுடைய காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்களுடைய குற்றங்களையும் மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ அவர் நிச்சயமாக மகத்தான பெரும் வெற்றியடைந்துவிட்டார்”

**முஸ்லிம்களே**! சீதேவித்தனமாக வாழ்வதே ஒவ்வொரு மனிதனின் குறிக்கோளாக இருக்கிறது. ஒவ்வொரு அறிவாளியின் ஆசையும் அதுதான். தனக்கு முழுமையாக கீழ்படிந்து நடப்பவர்களுக்கு இறைவன் ஈடேற்றமான வாழ்வையும் சீதேவித்தனமான நிலையையும் தருவதாக தனது திருமறையில் வாக்களிக்கிறான்: (16:97)

مَنْ عَمِلَ صَالِحًا مِنْ ذَكَرٍ أَوْ أُنْثَى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهُ حَيَاةً طَيِّبَةً وَلَنَجْزِيَنَّهُمْ أَجْرَهُمْ بِأَحْسَنِ مَا كَانُوا يَعْمَلُونَ

“ஆணாயினும், பெண்ணாயினும் நம்பிக்கை கொண்டு நற்செயல்களை எவர் செய்தாலும் நிச்சயமாக நாம் அவர்களை (இம்மையில்) நல்ல வாழ்க்கையாக வாழச்செய்வோம். அன்றி (மறுமையிலோ) அவர்கள் செய்து கொண்டிருந்ததை விட மிக்க அழகான கூலியையே நிச்சயமாக நாம் அவர்களுக்குக் கொடுப்போம்”

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் இந்த வசனத்திற்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள்: உயர்தரமான வாழ்வு என்பது சீதேவித்தனமான வாழ்வை குறிக்கும். எந்த வகையிலும் முகம் ஒளிமயமாகவும், புத்துணர்ச்சியோடு இருக்கும் என்பது இந்த வசனத்தின் மையக் கருத்தாகும். ((601/4) : تفسير ابن كثير)

இவற்றில் மிகவும் முக்கியமானதும், முதன்மையானதும், சங்கையானதும், மகத்தானதும் யாதெனில் உள்ளம் மிகவும் சீதேவித்தனமாக இருப்பதாகும். அல்லாஹ்வை முழுமையாக நம்பி, அவனை மிக உண்மையாக நேசிப்பதன் மூலம் அத்தகைய உள்ளத்தை பெற முடியும். அவனிடமே அபயம் தேடி ஒதுங்க வேண்டும், அவனுடைய கட்டளைகளை பின்பற்ற வேண்டும். காரணம் இத்தகைய உள்ளம் கொண்டவரின் வாழ்வை விட ஒரு சிறப்பான வாழ்வு வேறு இல்லவே இல்லை. இந்த நற்பாக்கியதிற்கு மேலான ஒரு நற்பாக்கியம் இல்லவே இல்லை. அப்படி ஒன்று இருக்கிறதென்றால் அது நாளை மறுமையில் கிடைக்கும் சொர்க்கமாகும்.

ஓர் இறைநேசர் கூறுகிறார்: சிலவேளைகளில் நான் இவ்வாறு சொல்லிக் கொள்வதுண்டு அதாவது, “சுவனவாசிகள் உயர்தரமான வாழ்வை பெறுவார்கள். இறைவனுக்கு கீழ்படிந்து நடப்பவர்களும் இதேபோன்றதொரு வாழ்வை வாழ்கிறார்கள். அவர்கள் எப்போதும் முக மலர்ச்சியோடு இருக்கிறார்கள், முகம் ஒளிமயமாக இருக்கும், மகிழ்ச்சியாகவும் தெளிவான பார்வையோடும் இருப்பார்கள் ((567/1) : فيض القدير شرح الجامع الصغير)

உள்ளம் உயர்தரமான சிந்தனையோடு சீதேவித்தனமாக இருந்தால் ஏனைய உறுப்புகளும் தூய்மையாக இருக்கும். எனவே யார் அதிகமான நற்காரியங்களில் ஈடுபட்டு, நன்மையான செயல்களுக்கு உதவியாக இருக்கிறாரோ நிச்சயம் அவர் இவ்வுலகிலேயே சீதேவித்தனத்தை அடைந்து கொள்வார். நாளை மறுமையில் வெற்றி பெறுவார். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (13:29)

الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ طُوبَى لَهُمْ وَحُسْنُ مَآبٍ

“எவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பதுடன், நற்காரியங்களையும் செய்து வருகிறார்களோ அவர்களுக்கே நற்பாக்கியமும், நல்ல இருப்பிடமும் உண்டு”



www.sunnathwaljamath.com

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுு அன்ஹுுமா அவர்கள் இந்த வசனத்திற்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள்: அவர்கள் மகிழ்ச்சியையும், கண் குளிர்ச்சியையும் பெற்றுக் கொண்டார்கள். (455/4 : تفسير ابن كثير)

அதாவது சீதேவித்தனத்தின் அடிப்படை கூறுகளை பெற்றுக் கொண்டார்கள் என்பதாகும். நல்ல இருப்பிடம் என்கிற சொல்லின் கருத்து நாளை இறுதிநாளில் கிடைக்கும் நல்ல முடிவாகும். அதாவது இறுதியாக சொர்க்கத்திற்குள் சென்று வசிக்கும் பாக்கியமாகும். வானம் பூமியின் அளவை விட அந்த சொர்க்கம் மிகவும் விசாலமாக இருக்கும், அந்த சொர்க்கத்தை அல்லாஹ் இறையச்சம் உடைய அடியார்களுக்காக தயார் நிலையில் வைத்திருக்கிறான். இந்த அடியார்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் சீதேவித்தனமாகவே இருப்பார்கள்.

இறைவனை தொடர்ந்து திக்ர் செய்து வருவதின் மூலமும் உள்ளத்தை தூய்மைப்படுத்த முடியும். அடுத்தடுத்து வர இருக்கும் ஆபத்துகள் விலகிச் செல்லும், தேவையற்ற பயம் விலகி நிம்மதி பிறக்கும். தன்னை படைத்தவனை அதிகமாக நேசிக்க முடியும், அவன்தான் உண்மையான எஜமானன் மற்றும் உதவியாளன் என்பதை முழு திருப்தியோடு ஏற்றுக் கொள்ள முடியும்( تفسير ابن كثير : 455/4)

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (13:28)

الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُمْ بِذِكْرِ اللَّهِ أَلاَ بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ

“மெய்யாகவே நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் அவர்கள்தாம்; (அவர்கள் முன்) அல்லாஹ்வின் திருப்பெயர் துதி செய்யப்பட்டால், அவர்களுடைய உள்ளங்கள் நிம்மதியடைந்து விடுகின்றன. (ஏனென்றால்,) அல்லாஹ்வின் திருப்பெயரை துதி செய்வதனால் (உண்மை நம்பிக்கையாளர்களின்) உள்ளங்கள் நிச்சயமாகத் நிம்மதி அடையும் என்பதை (நபியே! நீங்கள்) அறிந்துகொள்ளுங்கள்”

“அல்லாஹ்வுடைய திக்ர் என்று சொல்லப்படுவதின் பொருள் “அவனுக்கு கீழ்படிந்து நடப்பது” என்கிற கருத்தும் கூறப்படுகிறது. (315/9 : تفسير الطبري)

இறைவனின் விதியை முழுவதுமாக பொருந்திக் கொள்வதினால் இவ்வாறு தனிமையிலும் சீதேவித்தனமாக இருக்க முடியும். மேலும் நிம்மதியாகவும், மனதில் எந்த பதற்றமும் இல்லாமல் அமைதியோடு வாழ முடியும். விதியை நம்புவது இறைநம்பிக்கையின் அடிப்படைகளில் ஒன்றாகும். விதியை எவ்வாறு நம்பிக்கை கொள்வது, மேலும் அதன் கூறுகளை எவ்விதம் புரிந்து கொள்வது போன்ற பல்வேறு விளக்கங்களை நமது ஷரீஅத் மிக தெளிவாக எடுத்துக் கூறுகிறது. விதியை நம்புவதின் மூலக்கூறு என்னவெனில் ஒரு முஃமீனான அடியான் எல்லா நிலையிலும் அதாவது மகிழ்ச்சியான தருணங்களிலும், சோதனையான தருணங்களிலும் இறைவனைப் பற்றிய நல்ல எண்ணம் மட்டுமே அவனுடைய உள்ளத்தில் நிறைந்திருக்க வேண்டும்.

கடுமையான சூழலிலும், இதமான சூழலிலும் இறைவன் மீது முழுமையான திருப்தி கொள்ள வேண்டும். இறைவன் தமக்கு வழங்கியவற்றை முழுமனதோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் அவனுடைய அருள் மீது ஆதரவு வைக்க வேண்டும். ஏதேனும் ஒரு வழியில் ஒருவருக்கு சோதனை வந்தால், அவர் சோர்ந்து விடக் கூடாது, களைப்படைந்து மன வலிமையை இழந்து விடக் கூடாது. அந்த சோதனையில் இருந்து மீள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் அதே வேளையில் இறைவனிடமும் மன்றாடி துஆச் செய்து கொண்டே இருக்க வேண்டும். நல்ல எண்ணத்தில் ஈடுபடும் போது நிச்சயம் இறைவனின் கிருபையால் சோதனைகளை விட்டு விடபட முடியும். நாம் எதிர்நோக்கிய இலக்கு ஒன்று ஆனால் நடப்பது ஒன்று என்றிருந்தால் அதற்காக கவலைப்படவோ மனம் சோர்ந்து விடவோ வேண்டாம், விதியை எண்ணி மனம் வெம்பி விடக்கூடாது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

وَإِنْ أَصَابَكَ شَيْءٌ فَلاَ تَقُلْ: لَوْ أَنِّي فَعَلْتُ كَانَ كَذَا وَكَذَا، وَلَكِنْ قُلْ: قَدَرُ اللَّهِ وَمَا شَاءَ فَعَلَ، فَإِنَّ لَوْ تَفْتَحُ عَمَلَ الشَّيْطَانِ

“உனக்குப் பயனளிப்பதையே நீ ஆசைப்படு. (அதற்காக) இறைவனிடம் உதவி தேடு. நீ தளர்ந்துவிடாதே. உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும்போது, "நான் (இப்படிச்) செய்திருந்தால் அப்படி அப்படி ஆயிருக்குமே!" என்று (அங்கலாய்த்துக்) கூறாதே. மாறாக, "அல்லாஹ்வின் விதிப்படி நடந்துவிட்டது. அவன் நாடியதைச் செய்துவிட்டான்" என்று சொல். ஏனெனில், ("இப்படிச் செய்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே" என்பதைச் சுட்டும்) சொல்லானது ஷைத்தானின் செயலுக்கே வழி வகுக்கும்” (2664 : مسلم )

அதாவது ஒருவன் நல்லதையே செய்கிறான். அதன் மூலம் கிடைக்கும் இலக்கை நிச்சயம் அடைந்து விட வேண்டும் என்கிற வேட்கையில் முழு மூச்சாக செயல்படுகிறான். அதையும் மீறி அவன் உலகியல் சார்ந்த அந்த இலக்குகளில் ஒன்றை இழந்து விட்டால் நிச்சயம் அதற்காக மனம் வருந்த வேண்டாம், சோர்வடைந்து விட வேண்டாம். காரணம் அவ்வாறுதான் தனக்கு விதியில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதை அவன் உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் காரணமாக உளவில் ரீதியாக பாதிக்கப்பட வேண்டாம். ((230/13) : فتح الباري لابن حجر)

அதற்கு நேர்மாற்றமாக, இறைவன் அதை விட சிறந்த ஒன்றை தனக்கு தருவான் என்று அந்த மனிதன் தன் மனதில் உறுதியான எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

عَجِبْتُ لِلْمُؤْمِنِ، إِنَّ اللَّهَ لَمْ يَقْضِ لَهُ قَضَاءً إِلاَّ كَانَ خَيْراً لَهُ

“ஒரு முஃமினின் நிலை குறித்து மிகவும் ஆச்சரியமடைகிறேன். (முஃமீனான) அவருக்கு நன்மையை நாடியே தவிர அல்லாஹ் அவருக்கு எந்த விதியையும் ஏற்படுத்தவில்லை” ( : أحمد 12489)

ஒவ்வொரு மனிதனும் பின்வரும் நபிமொழியை எண்ணி ஆறுதல் அடைந்து கொள்ள வேண்டும்:

وَاعْلَمْ أَنَّ النَّصْرَ مَعَ الصَّبْرِ، وَأَنَّ الْفَرَجَ مَعَ الْكَرْبِ، وَأَنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

“நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள்! நிச்சயமாக பொறுமையாக இருந்தால் உதவி கிடைக்கும், இன்னல்களுக்கு பிறகு (அவற்றிலிருந்து) விடுதலை கிடைக்கும், துன்பங்களுக்கு பிறகு இன்பம் கிடைக்கும்” (2803 : أحمد)

யார் மனநிறைவோடு விதியை பொருந்திக் கொள்கிறாரோ அவர் போதுமென்ற மனதுடன் திருப்தியாக வாழ்வார், நிம்மதியாகவும், அச்சமற்ற நிலையிலும், தன்னிறைவு பெற்ற நிலையிலும் வாழ்வார். காரணம் சீதேவித்தனமான வாழ்வை பெறுவதற்கு போதுமென்ற மனமும் மிகவும் அவசியமாகும். இதன் மூலக்கூறு மனத்திருப்தியும், யாரிடமும் கையேந்தாத பத்தினித் தனமும் ஆகும். மேலும் அவசியமற்ற முறையில் யாரிடமும் யாசகம் கேட்பதையும் அதிகமாக எதிர்பார்ப்பதையும் விட்டொழிக்க வேண்டும். இதுவே உண்மையான செல்வ நிலையாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

وَارْضَ بِمَا قَسَمَ اللَّهُ لَكَ تَكُنْ أَغْنَى النَّاسِ

“இறைவன் உனக்கு வழங்கியவற்றை (முழு மனதோடு) நீ பொருந்திக் கொள் (அப்படி செய்தால்) நீயே மனிதர்களில் பெரிய செல்வந்தனாக இருப்பாய் (2305 : الترمذي)

காரணம் அல்லாஹ் தனக்கு வழங்கியதை யார் போதுமாக்கிக் கொள்கிறாரோ அவர் மற்றவர்களிடம் இருப்பதை பார்த்து ஆசைப்பட மாட்டார். எனவே யாரிடமும் கேட்டு பெறவேண்டிய மனநிலையில் அவர் இருக்க மாட்டார். யாருடைய உதவியும் இல்லாமல் வாழ்வதே தன்னிறைவு பெற்ற செல்வ நிலையாகும். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ الْغِنَى عَنْ كَثْرَةِ الْعَرَضِ، وَلَكِنَّ الْغِنَى غِنَى النَّفْسِ

“(வாழ்க்கை) வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று; மாறாகப் போதுமென்ற மனமே (உண்மையான) செல்வமாகும் (متفق عليه)

போதுமென்ற மனதோடு வாழ வேண்டும் என்று முன்னர் வாழ்ந்த பல அறிஞர்கள் தமது பிள்ளைகளுக்கு அறிவுரை கூறியுள்ளனர். அப்படிப்பட்ட மன நிலையில்தான் மன நிம்மதியும், சீதேவித்தனமான வாழ்வும் அமையும் என்றும் அறிவுரை கூறியுள்ளனர். “எனது செல்ல மகனே! தன்னிடம் உள்ளவற்றை யார் போதுமென்று மன நிறைவோடு ஏற்றுக் கொள்கிறாரோ நிச்சயம் அவர் சீதேவித்தனமான நிலையை அடைந்து கொள்வார் என்று ஒருவர் தன் மகனுக்கு அறிவுரை கூறியுள்ளதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு கவிஞர் கூறுகிறார்:

هِيَ الْقَنَاعَةُ لاَ تَرْضَى بِهَا بَدَلاً    فِيهَا النَّعِيمُ وَفِيهَا رَاحَةُ الْبَدَنِ

“அதுவே போதுமென்ற மன நிலையாகும், அதற்கு ஈடாக வேறு (சிறந்த மன நிலை) இல்லை. அதிலே வாழ்வின் சுபிட்சமும் இருக்கிறது, அதிலே உடல் நிம்மதியும் இருக்கிறது”

**அல்லாஹ்வின் அடியார்களே**! சீதேவித்தனமான வாழ்வு என்பது இறைவனுக்கு முழுமையாக கீழ்படிந்து நடக்க வேண்டும், அடுத்ததாக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும், அல்லாஹ் வழங்கியவற்றை போதுமென்று ஏற்றுக் கொள்ள வேண்டும், ஒரு குடும்பத்தலைவன் தனக்கு கீழ் உள்ளவர்களுக்கு தன்னிறைவு பெற்ற வசதிகளை வழங்க வேண்டும், தனது பொறுப்பை உணர்ந்து குடும்ப உறுப்பினர்களை கவனமாக பாதுகாக்க வேண்டும். பிள்ளைகளை நன்கு கண்காணித்து உரிய நேரத்தில் அறிவுரைகள் வழங்க வேண்டும். ஒரு மனைவி பேராசை கொள்ளக் கூடாது, வசதி படைத்தவர்களோடு தமது சூழலை ஒப்பீடு செய்து கொண்டே நாட்களை தள்ளக்கூடாது. நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَرْبَعٌ مِنَ السَّعَادَةِ: الْمَرْأَةُ الصَّالِحَةُ، وَالْمَسْكَنُ الْوَاسِعُ، وَالْجَارُ الصَّالِحُ، وَالْمَرْكَبُ الْهَنِيءُ

“(பின்வரும்) நான்கும் சீதேவித்தனமாகும். (அவை) நற்குணம் நிறைந்த நல்ல மனைவி, தேவைகேற்ப உள்ள வசதியான வீடு, பரந்த மனப்பான்மையுள்ள அண்டை வீட்டுக்காரன், எந்த தடங்கலும் செய்யாத வாகனம் (4032 : صحيح ابن حبان)

ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு விட்டுக்கொடுத்து செல்லும் தம்பதிகளால் மன நிறைவான வாழ்க்கை வாழ முடியும். அமைதியான மற்றும் சீதேவித்தனமான வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கும். ஒருவர் மீது ஒருவருக்கு அன்பும் அக்கறையும் அதிகமாகும். வீட்டில் உள்ள அனைவரோடும் மகிழ்வோடு பழக முடியும். ஒவ்வொரு நாளும் வாழ்க்கை மிகவும் சுபிட்சமாக அமையும். ஒவ்வொரு குடும்பமும் சுபிட்சமாக இருந்தால் ஒரு சமுதாயமே சுபிட்சமாக இருக்கும். உயர்தரமான ஒரு சமூகத்தை கட்டமைப்பதற்கு அதுவே மிகப்பெரிய அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கும். ஒரு சமூக வளர்ச்சியின் மூலக்கூறும் அதுவேயாகும்.

எனவே, “நமது உள்ளம் நிம்மதியாக இருக்கிறதா? இறைவனை நோக்கி நமது செயல்பாடுகள் அமைந்துள்ளனவா? இறைவன் நமக்கு விதித்தவற்றை நாம் பொறுத்துக் கொள்கிறோமா? அவன் நமக்கு வழங்கியவற்றை போதுமென்ற மனதுடன் ஏற்றுக்கொள்கிறோமா? குடும்பத்தினரோடு தன்னிறைவு பெற்ற வாழ்வை வாழ முயற்சிக்கிறோமா? என்று நாம் ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேள்விக் கேட்டு, நமது வாழ்வையும் எண்ண ஓட்டத்தையும் பகுப்பாய்வு செய்து கொள்ள வேண்டும். இதுவெல்லாம் ஒரு சீதேவிதனமான வாழ்வை அமைத்துக் கொடுக்கும்.

யா அல்லாஹ்! எங்கள் உள்ளத்திற்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும், சமுதாயத்திற்கும் சீதேவித்தனமான வாழ்வை தருவாயாக!! எங்கள் மனைவி மற்றும் எங்கள் சந்ததிகள் மூலம் கண் குளிர்ச்சியை தருவாயாக!!! எங்கள் தாய் தந்தைக்கு பணிவிடை செய்யும் நற்பாக்கியத்தை தருவாயாக!!!



www.sunnathwaljamath.com

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! சமுதாயத்தில் உள்ள அனைவரும் சீதேவித்தனமான ஒரு வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக நமது நீதமான அரசு முனைப்புடன் செயல்படுகிறது. குடிமக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுகிறது, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்குகிறது. பொது மக்களின் தேவை அறிந்து வேண்டிய வசதி வாய்ப்புகளை இந்த அரசு நிறைவேற்றித் தருகிறது. ஒவ்வொருவருக்கும் ஒளிமயமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மனித நேயத்தோடும் தொலைநோக்கு சிந்தனையோடும் நமது அரசு செயல்படுகிறது.

சமுதாயத்திற்கு தேவையான நலத்திட்டங்களை இடைவிடாமல் நிறைவேற்றிக் கொண்டே இருக்கிறது. அடுத்தடுத்த செயல் திட்டங்களையும் மிகவும் வலிமையோடு தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று கொண்டே இருக்கிறது. எல்லாம் இந்த சமுதாயம் தன்னிறைவு பெற்ற சுபிட்சமான சீதேவித்தனமான வாழ்வை பெறுவதற்காகத்தான். இந்த அமீரகத்தில் உள்ள ஒவ்வொருவரும் மன நிறைவோடு வாழ வேண்டும் என்கிற நோக்கத்தில் இவ்வாறு நமது அரசு செயல்படுகிறது. பின்வரும் நபிமொழியை மெய்ப்படுத்தும் விதமாக நமது ஆட்சியாளர்கள் தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டுள்ளனர்:

خِيَارُ أَئِمَّتِكُمُ الَّذِينَ تُحِبُّونَهُمْ وَيُحِبُّونَكُمْ، وَيُصَلُّونَ عَلَيْكُمْ وَتُصَلُّونَ عَلَيْهِمْ

"உங்கள் தலைவர்களில் நல்லவர்கள் யாரெனில், அவர்களை நீங்கள் நேசிப்பீர்கள். உங்களை அவர்கள் நேசிப்பார்கள். உங்களுக்காக அவர்கள் பிரார்த்திப்பார்கள். அவர்களுக்காக நீங்கள் பிரார்த்திப்பீர்கள்” (4910 :مسلم)

அதாவது உங்களுடைய ஆட்சியாளர்களில் சிறந்தவர்கள் யாரெனில் நீங்கள் அந்த ஆட்சியாளர்களை நேசிப்பீர்கள், அவர்களும் உங்களை நேசிப்பார்கள். அவர்களுக்காக நீங்கள் துஆச் செய்வீர்கள், அவர்களும் உங்களுக்காக துஆச் செய்வார்கள். யா அல்லாஹ்! எங்களுக்கு அவர்கள் செய்த நல்லுபகாரத்தை போன்று நீயும் அவர்களுக்கு நல்லுபகாரம் செய்வாயாக!! இந்த தேசத்தையும் அதன் குடிமக்களையும் சிறந்த முறையில் பேணி பாதுக்காக்கும் அவர்களுக்கு நீ உதவி புரிவாயாக!!

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக,

நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com